கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட / முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு –

2015 / 2016 (மார்ச் 2019)

# TLS 2143 குறிப்பிட்ட பாடநூல்கள் I

# Prescribed Text I

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பின்வருவனவற்றுள் முதலாம் பகுதியிலிருந்து எவையேனும் **இரு** வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி I

1. (அ) தனிப்பாடல் என்றால் என்ன என்பதை வரையறை செய்து, அவற்றின் பண்புகளை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) 'ஔவையாரின் தனிப்பாடல்கள் பெருமளவில் வாழ்வியல் அறத்தைப் போதிக்கின்றன' இக்கூற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

2. (அ) இனியவை நாற்பது தோன்றுவதற்கான சமூகச் சூழல் யாது? (05 புள்ளிகள்)

   (ஆ) இனியவை நாற்பதில் சமூக, பொருளாதார மேம்பாடு தொடர்பாக முன்வைக்கப்படும் அறக்கருத்துக்களைப் பாடல்களின் துணைகொண்டு எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

3. (அ) ஆற்றுப்படையின் அமைப்பினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   (ஆ) பெரும்பாணாற்றுப்படையில் சித்திரிக்கப்படும் சமூகங்களின் வாழ்க்கை முறை குறித்து விபரிக்குக. (15 புள்ளிகள்)

*(ம.ப.பா)*

## பகுதி II

4. கலிங்கத்துப்பரணி 'காடு பாடியது' பகுதியில் பாலைவனத்தின் வெம்மை சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
(20 புள்ளிகள்)

5. சீறாப்புராணம் நதிகடந்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு, முகம்மது நபி (ஸல்) அவர்களின் மாட்சிமைகள் வெளிப்படுத்தப்படுமாற்றினை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

6. தேம்பாவணி 'மகவருள் படலம்' என்ற பகுதியில் சூசை, மரியாள், யேசு கிறிஸ்து ஆகியோரின் சிறப்புக்கள் எடுத்துரைக்கப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.
(20 புள்ளிகள்)

7. அகநானூற்றில் பாலை நிலத்துக்குரிய அகவொழுக்கம் சித்திரிக்கப்படுமாற்றினை உமக்குத் தரப்பட்ட பாடப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக்காட்டுக.
(20 புள்ளிகள்)

******************